**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 36/2016**

**02.12.2021 அ.சா.5 செல்வராஜ் - சத்திய பிரமாணத்தின் பேரில் மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 கல்பனா என் அக்காவின் மகள். அ.சா.2, அ.சா.1 ன் மாமியார். அ.சா.3 இறந்து போன பரசுராமனின் அக்காவின் கணவர். எதிரிகளை தெரியும். அ.சா.1 எனக்கு தகவல் சொன்னதின் அடிப்படையில் நான் மறுநாள் காலை மருத்துவமனை சென்று பரசுராமனை பார்த்தேன். சம்பவம் சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது. 1ம் எதிரி பரசுராமனை அரிவாளால் வெட்டிய விஷயத்தை அ.சா.1 எனக்கு தொலைபேசி மூலம் சொன்னார். மேற்சொன்ன விஷயத்தை அ.சா.1 என்னிடம் தெரிவித்ததாக சொல்வதே தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் அ.சா.1 என் அக்கா மகள் என்பதால் பவ்யப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2, 3 எதிரிகள் பரசுராமனை கட்டையால் தாக்கியதாக அ.சா.1 என்னிடம் தொலைபேசியில் தெரிவித்தார் என்ற விவரமே பொய்யானது என்றால் சரியல்ல. நான் கேள்விபட்டதாக சொல்லும் சம்பவங்கள் எதுவும் நடக்கவில்லை என்றும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

ஒம்/- செல்வராஜ்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.